**ஆணமடுவ பிரதேச சபை - 2024**

------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஆணமடுவ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஆணமடுவ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் ஆணமடுவ பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணத்திற்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. | 2025 ஆம் ஆண்டு முதல் சரியாக கணக்காய்வுக் கட்டணத்தை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான செலவினங்களுக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியதாக கணக்கீடு செய்யப்படாத ரூபா 4,082,869 ஆன நீதிமன்ற தண்டப்பணம் மீளாய்வாண்டின் போது கிடைக்கப் பெற்றதுடன் அப்பெறுமதி கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணக் கணக்கில் செலவுவைத்தமையால் மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமனம் என்பன அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டு முதல் குறைபாடுகள் இன்றி இந்த சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| | நிதிப்பிரமாணம் 571(2) | 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப் படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 செப்டெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற அரச நிதி சுற்றறிக்கை | | | |
| | 2.1 ஆம் பந்தி | திணைக்களத் தலைவர் மற்றும் பிரதேச செயலாளரால் பெயர்குறிப்பிடப்படுகின்ற 02 பிரதிநிதிகளை உள்ளடக்கிய மூன்று நபர் குழுவொன்றின் மூலம் தகைமைகளை பரீட்சிக்காமல் மீளாய்வாண்டில் 44 வேலைகளை பூர்த்தி செய்வதற்காக சமூக அமைப்புக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | ஒப்பந்த அமைப்புக்கள் உரிய பிரதேச செயலகங்களின் கீழ் இருக்கின்ற உத்தியோகத்தர்களால் பரிந்துரை செய்யப்பட்டு பிரதேச செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் விநியோகிக்கக்கூடிய சான்றிதழை அடிப்படை யாகக் கொண்டு இதுவரை ஒப்பந்தம் கையளிக்கப் பட்டதுடன் எதிர்காலத்தில் அரச நிதிச் சுற்றறிக்கை 01/2021 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 29,096,786 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,202,297 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| (i) | ஆதன வரியும் வரியும் | 6,852 | 6,601 | 7,998 | 11,540 | 6,137 | 6,172 | 7,670 | 12,937 |
| (ii) | வாடகை | 24,642 | 26,776 | 27,016 | 1,052 | 21,094 | 21,354 | 20,860 | 1,129 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 785 | 553 | 553 | - | 705 | 596 | 596 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 8,066 | 4,534 | 4,534 | - | 6,642 | 6,642 | 6,642 | - |
| | மொத்தம் | 40,345 | 38,464 | 40,101 | 12,592 | 34,578 | 34,764 | 35,768 | 14,066 |

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதி வரியும் வரியும்** | | |
| i. 2025 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு ஆதன வரி நிலுவை ரூபா 7,115,505 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் 01 வருடத்திற்கு குறைந்த ரூபா 632,576 தொகையும், 01 வருடத்திற்கு மேற்பட்ட 03 வருடங்களுக்கு குறைந்த ரூபா 3,663,172 தொகையும், 03 வருடங்களுக்கு மேற்பட்ட 05 வருடங்களுக்கு குறைந்த ரூபா 2,597,410 தொகையும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 222,347 தொகையும் ஆக நிலுவை மீதி காணப்பட்டது. | ஆதனவரி நிலுவையை அறவிடுவதற்கு கடந்த ஆண்டின் போது சிவப்பு அறிவித்தல் விநியோகித்தல், நடமாடும் நிகழச்சித் திட்டங்களை அமுல்படுத்துதல், ஆதனங்களை தடைசெய்தல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. காலாண்டுரீதியில் நிலுவை மீதி ஒவ்வொரு பிரிவிற்கும் வருமானப் பரிசோதகருக்கு வழங்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் பிரதேசத்திற்குச் சென்று ஆதனவரி அறவிடல் மேற்கொள்ளப்படுகின்றது. | நிலுவை ஆதன வரியை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ii. | மீளாய்வாண்டிற்காக ஏக்கர் வரி ரூபா 28,428 மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் எந்தவொரு தொகையும் சிட்டையிடப் பட்டிருக்கவில்லை. கடந்த ஆண்டு வரை காணப்பட்ட ரூபா 422,652 நிலுவைத் தொகையில் எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | தற்போது வரையில் இந்த காணிப் பகுதிகள் ஒதுக்கி விற்பனை செய்யப்பட்டதன் காரணமாக ஏக்கர் வரி அறவிடல் வசதியினமாகக் காணப்பட்டது. அவ்வாறே இந்தக் காணி தற்போது இனங்காணும் முறைமையொன்றும் காணப்படவில்லை. எனினும் தொடர்ந்தும் ஏக்கர் வரி அறவிடுவதற்கான தகவல்கள் சேகரிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | நிலுவை வருமானங்களை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) வாடகை**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வாடகை மீதி ரூபா 1,052,235 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் 01 வருடத்திற்குக் குறைந்த ரூபா 473,435 தொகையும், 03 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 578,800 தொகையும் நிலுவை மீதியாகக் காணப்பட்டது. அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 03 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 578,800 நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்காக வழக்கு தொடர்ந்து தீர்ப்பினைப் பெற்று மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானங்களை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுமதி ரூபா 2,670,000 ஆன உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட 05 டெக்டர் டேலர்கள் மற்றும் வார்ப்பிரும்பு நீர் பௌஸர் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. | இந்த 05 டெக்டர் டெய்லர்கள் வெள்ளை இரும்பு நீர் பௌஸர் அமைச்சினால் பதிவு செய்யப்படாமல் வழங்கப்பட்டி ருந்ததுடன் எங்களாலும் பதிவு செய்யப்படவில்லை. எதிர்வரும் ஆண்டில் இந்த வாகனங்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சகல வாகனங்களும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆதனவரி பதிவேடு நாளதுவரையாக் கப்படாமல் பேணிச் செல்லப்பட்டதன் காரணமாக கம்உதாவ மற்றும் பரமா கந்த வட்ட வீதி போன்ற ஆதனவரி பிரிவுகளில் ஆதனவரிப் பதிவேட்டில் தற்போது குடியிருக்கின்ற உரிமையா ளர்கள் பெயர் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. அதனால் அவர்களால் ஆதனவரி செலுத்துதல் நிராகரிக்கப் பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,869,568 நிலுவை காணப்பட்டது. | கம் உதாவ மாவத்தைக்குரிய ஆதனவரி பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டுள்ளதுடன் தற்போது காலாண்டிற்குரிய நாளதுவரையாக்ககல்கள் மேற் கொண்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | ஆதனவரிப் பதிவேடு நாளதுவரையாக்கி நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை ஆதனவரி மீள் திருத்தம் செய்ய வேண்டியிருந்த போதிலும் சபையால் 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது. | மதிப்பீடொன்றை மேற்கொள்வதற்காக தொடர்ச்சியாக மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கோரப்பட்டதுடன் மதிப்பீட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்ப தற்குத் தேவையான முற்பணத் தொகையும் செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தற்போது மதிப்பீடை மேற்கொள்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திலி ருந்து வருகை தந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டது டன் எதிர்வரும் தினங்களில் உரிய மதிப்பீட்டு நடவடிக்கைளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | கால ரீதியில் ஆதனவரி மதிப்பீடை மேற்கொண்டு அதன் பிரகாரம் ஆதன வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபைக்குரிய 06 பழக் கடைகள், மஹக்கும்புக்கடவலயில் அமைந்துள்ள 08 கடைகள் மற்றும் பேருந்து தரிப்பிட நிலையத்தில் அமைந்துள்ள 04 தற்காலிக கடைகளுக்காக மாதாந்த வாடகை மதிப்பீடு செய்யப்படாமல் முகாமைத்துவக் குழுவின் மூலம் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் வாடகை அறவிடப்பட்டிருந்தது. | சபைக்குரிய 06 பழக்கடைகள் மஹக்கும்புக்கடவலயில் அமைந்துள்ள 08 கடைகள் மற்றும் 04 தற்காலிக கடைகளுக்காக முகாமைத்துவக் குழு தீர்மான இலக்கம் 4521 தீர்மானத்தின் கீழ் மாதாந்த வாடகை தீர்மானிக்கப்பட்டதுடன் அந்த கடைகள் சபைக்குரித்தற்ற காணியில் நிர்மாணிக்கப்பட்ட தற்காலிக, வசதிகள் குறைந்த கடைகள் ஆகும். எதிர்வரும் ஆண்டின் போது மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடை வாடகை மதிப்பீடு செய்து அதன் பிரகாரம் வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கல்குளமில் 03 கடைகளுக்கான வாடகை மதிப்பீட்டுக் காலம் 2023 திசம்பர் 31 ஆம் திகதியில் | எதிர்காலத்தில் அந்தக் கடைகளை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை | கால ரீதியில் கடை வாடகை மதிப்பீடு செய்து அதன் |

| | | | |
|---|---|---|---|
| | முடிவடைந் திருந்ததுடன் மீண்டும் மதிப்பீடு செய்யப்படாமல் 2024ஆம் ஆண்டிற்காக பழைய வாடகை மதிப்பீட்டு வாடகை அறவிடப்பட்டிருந்தது. | எடுக்கப்படும். | பிரகாரம் வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குரிய சந்தைக் கட்டிடத் தொகுதியில் 21 கடைகள் 05 வருடங்கள் அளவிலான காலம் முதல் வாடகைக்கு வழங்குவதற்கு முடியாமையின் காரணமாக விளைவற்றுக் காணப்பட்டது. | இந்தக் கட்டிடத்தில் அமைவிடம் மற்றும் வீதிக்கு நுழைய முடியாதிருந்தமையால் கொள்வனவாளர்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு முன் வரவில்லை. உள்ளூராட்சி ஆணையாளருடன் கலந்துரையாடி மாதாந்தக் கட்டணத்தைக் குறைக்கும் திட்டத்தின் அல்லது மிகுதி யாகவுள்ள கடைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்குச் சொந்தமான ஆதனங்களை ஆக்க பூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் மாகாண குறித் துரைத்த அபிவிருத்தி மானியத்தின் மூலம் ரூபா 4,196,835 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கம்மன்தலுவ கல்குளம நீர் செயற்திட்டத்தின் மூலம் நீரை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமையால் 06 வருடங்களுக்கு அண்மித்த காலம் முதல் செயற்திட்டம் விளைவற்றுக் காணப்பட்டது. | இந்த செயற்திட்டத்தை செயற்படு நிலையில் காணப்படாதிருந்ததுடன் அதற்காக அடிப்படைப் பிரச்சினைகள் சில காணப்பட்டது. இது தொடர்பாக உரிய தரப்பினருடன் கலந்துரையாடி பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நீர் செயற்திட்டத்தை அமுல்படுத்தி மக்களின் தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 3,000,000 செலவில் ஸ்தாபிக்கப்பட்ட உண்டியங்குளம் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் நீர் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை யின் காரணமாக 09 வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | நீர் பாய்ச்சலில் நீர் தேவையின் பிரகாரம் காணப்படாமையில் உரிய பிரதேசத்திற்கு நீரை வழங்கும் நிலையம் செயலிழந்து மக்கள் அதற்காக மாற்று நடவடிக்கை எடுத்தமையால் ஆணமடுவ பிரதேசத்தில் வேறு நீர்த் தேவை காணப்படுகின்ற நிலையங்களில் ஸ்தாபித்து அந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான பின்புலம் தற்போது கண்டறியப்படுகின்றது. | மக்களின் தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை அமைந்துள்ள காணியினை உள்ளடக்கி 11 ஆதனங்கள் மற்றும் மயான நிலங்களின் சட்ட ரீதியான உரித்து சபைக்கு கையேற்கப்படா திருந்ததுடன் மயான நிலங்களை பராமரிப்பதற்காக ரூபா 561,333 தொகை மீளாய்வாண்டின் போது சொலவிடப்பட்டிருந்தது. | ஆதனங்களின் சட்டரீதியான உரித்தை சபைக்கு கையேற்பதற்காக உரிய ஆவணங்கள் பிரதேச செயலாளர், மாகாண காணி ஆணையாளர், காணி அமைச்சு போன்ற மேற்கூறப் பட்ட நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. | சபைக்கு சொந்தமான ஆதனங்களைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் மூன்றாம் தரத்தில் பதவியொன்று, இரண்டாம் தரத்தில் 09 பதவிகள் மற்றும் ஆரம்ப தரத்தில் 02 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டது. | மூன்றாம் தரத்தின் பதவி மற்றும் இரண்டாம் தரத்தின் பதவி வெற்றிடங்கள் வடமேல் மாகாண பிரதம செயலாளருக்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. | ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண குறித்துரைத்த மற்றும் அமைச்சு உதவியின் மூலம் ரூபா 39.5 மில்லியன் செலவில் 15 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களை உள்ளடக்கிய 22 மூலதன செலவின விடயங்களை நிறைவேற்றுவதற்கு பாதீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவை செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப் படுகின்ற வேலை விடயங்கள் பாதீடு செய்யப்பட்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரித்து அமுல் படுத்துதல் வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொருத்தமான மற்றும் சரியான மதிப்பீடு தயாரிக்காமை மற்றும் பாதீட்டு பணிகள் திட்டமிடப்பட்ட பிரகாரம் நிறைவேற்றாமை யின் காரணமாக 16 செலவினவிடங்களுக் காக வழங்கப்பட்டிருந்த ரூபா 10,138,400 ஆன நிதி ஏற்பாடு முழுமையாக சேமிக்கப் பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பாதீடு செய்யப்பட்ட இலக்கினை அடைந்து கொள்வதற்கு முடியுமான வகையில் செயற்பாடுகளை திட்டமிடுதல் வேண்டும். |

## 4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 08 இனங்கண்டு அந்த நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான 29 குறிகாட்டிகளை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதில் ஆறாவது நோக்கமாக இனங்காணப்பட்ட சகலருக்கும் குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குவதற்கான 03 குறிகாட்டிகள் (பொதுக் கிணறுகளை நிர்மாணித்தல், பராமரித்தல், சுகாதார வசதிகளுக்கான உதவி மற்றும் சுகாதார கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்) இற்காக எந்தவொரு செயற்பாடும் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |